மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை.
முன்னிலை:திரு.S.இளையராஜா, M.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ம் நாள் புதன்கிழமை
இ.ஏ.எண்.5/2025
IN
இ.பி.எண்.2/2025
IN
அசல் வழக்கு எண்.78/2015

செல்வக்குமார் ... மனுதாரர்/பிரதிவாதி/தீர்ப்பு கடனாளி

/எதிர்/

ஈஸ்வரி ... எதிர்மனுதாரர்/வாதி/தீர்ப்பாணை பெற்றவர்

இம்மனுவானது 03.12.2025 ம் தேதியில் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.முருகேசன் அவர்களும், எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.ராஜ்மகேந்திரன் அவர்களும் ஆஜராகியும், இருதரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## உத்தரவு

இம்மனுவானது மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பில் கட்டளை 21 விதி 26 மற்றும் பிரிவு 151 சிபிசின் கீழ் தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் மே.வ.எண்.23/2025 வழக்கு முடியும் வரை, இ.பி.எண்.2/2025 நிறைவேறுதல் மனு மீதான நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும்படிக்கு (Stay) உத்தரவு பிறப்பிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.12.17 15:21:10 +0530

**2)     மனுவின் சுருக்கம் :-**

மனு அட்டவணைச் சொத்திலிருந்து மனுதாரரை வெளியேற்றி சொத்தின் அனுபவம் எதிர்மனுதாரர்/வாதிக்கு கிடைக்க வாழ்விப்பு கட்டளை பிறப்பிக்க வேண்டி இந்த நிறைவேறுதல் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவில் 18.09.2025 அன்று மனுதாரர்/தீர்ப்பு கடனாளி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இ.ஏ.எண்.4/2025 தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில், அந்த மனுவுடன் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும்,

மேலும் அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையினை எதிர்த்து தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் மே.வ.எண்.23/2025 மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியுள்ளதாகவும், மேல்முறையீட்டு வழக்கின் முழுமையான விசாரணைக்கு பின்னரே தெளிவான தீர்வு காண வேண்டியுள்ளதாகவும், எதிர்மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள நிறைவேறுதல் மனுவின் மீது யாதொரு உத்தரவும் பிறப்பிக்கப்படுமேயானால் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு வழக்கின் மீது யாதொரு பலனும் இல்லாமல் போய்விடக்கூடியதாக இருப்பதாகவும், எனவே தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் மே.வ.எண்.23/2025 வழக்கு முடியும் வரை, இ.பி.எண்.2/2025 நிறைவேறுதல் மனு மீதான நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க உத்தரவிடவேண்டி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.17 15:21:16 +0530

3.    <u>எதிர்மனுதாரர் / வாதி தரப்பு எதிருரையின் சுருக்கம்</u> :–

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை. மனுவில் கோரும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கதக்கதில்லை. மனுதாரர்/தீர்ப்பு கடனாளி நிறைவேறுதல் மனுவில் கடந்த 24.07.2025 அன்று தனது வழக்கறிஞர் மூலமாக ஆஜராகி எதிருரை தாக்கல் செய்வதற்காக 14.08.2025, 14.09.2025, 18.09.2025 ஆகிய வாய்தாக்களை பெற்றுக்கொண்டதாகவும், அதன்பின்பும் மனுதாரர் எதிருரை தாக்கல் செய்யாததால், மனுதாரரை அழைத்தும் ஆஜராகாததால் மனுதாரர் மீது கடந்த 18.09.2025 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மனு தபசில் சொத்தை எதிர்மனுதாரருக்கு சுவாதீனம் எடுத்துக்கொடுப்பதற்காக அன்றைய தினமே உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி உத்தரவினை எதிர்மனுதாரரும் மனு தபசில் சொத்தை சுவாதீனம் பெறுவதற்காக படி மெமோவும் கட்டியுள்ளதாகவும், எதிர்மனுதாரர் மனு தபசில் சொத்தை சுவாதீனம் பெற்றுவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் மீது பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டி இ.ஏ.எண்.4/2025 மனு தாக்கல் செய்ததில் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் தரப்பில் Notice of Hearing கொடுக்க வேண்டி கடந்த 24.09.2025 அன்று வாய்தா போடப்பட்டிருந்ததாகவும், அன்றைய தினம் மனுதாரர் தரப்பில் Notice of Hearing தாக்கல் செய்யாததால், மேற்படி மனுவை கடந்த 24.09.2025ம் தேதியன்று தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளதாகவும், மேற்படி விவரங்களை மறைத்து மனுதாரர் பொய்யான சங்கதிகளை கூறி மேற்படி தள்ளுபடியான இ.ஏ.4/2025 மனுவை மீண்டும் கோப்புக்கு எடுக்க வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல.

மனுதாரருக்கு இவ்வழக்கில் யாதொரு கட்சியும் இல்லாததாலும், எதிர்மனுதாரரை வீண், கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டும் என்ற எண்ண்ணதிலும்,

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.17 15:21:22 +0530

அசல் வழக்கில் எதிர்மனுதாரருக்கு அனுகூலமாக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பலன்களை எதிர்மனுதாரர் அடைந்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்திலும் பொய்யாக சங்கதிகளைக் கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே, இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) **பிரச்சினை :–**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதுதான் இம்மனுவின் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

## தீர்வுகள்

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்/தீர்ப்பு கடனாளி இந்த மனுவினை பிரதான நிறைவேற்று மனுவான இ.பி.எண்.2/2025 நடவடிக்கையை நிறுத்தி வைக்கக் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதற்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணமானது மனுதாரர்/தீர்ப்பு கடனாளிக்கு எதிராக இந்த நீதிமன்றம் அசல் வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மாண்புமிகு முதன்மை சார்பு நீதிமன்றம், தென்காசியில் மேல்முறையீட்டு வழக்கு எண்.23/2025 தாக்கல் செய்துள்ளதாகவும், ஷை மேல்முறையீட்டில் தீர்ப்பு வரும் வரை இந்த நிறைவேறுதல் மனு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க வேண்டும் என கூறியுள்ளார்.

அதேவேளையில் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் தரப்பில், மனு தபசில் சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவர் பெற்றுவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்திலும், 15.08.2009 தேதி நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்/தீர்ப்பாணை பெற்றவருக்கு ஆதரவாக பிறப்பித்த சுவாதீனம் எடுத்துக்கொள்ளும் உத்தரவை செயல்படுத்தவிடாமல் இருப்பதற்காக

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.17 15:21:30 +0530

இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அதனால் இம்மனுவை தள்ளுபடி செய்யும்படி ஆட்சேபிக்கப்பட்டது.

மேற்படி இருதரப்பிலும் சொல்லப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்கையில், மனுதாரர் பிரதான நிறைவேறுதல் மனுவானது இ.பி.எண்.5/2025 நடவடிக்கையை Stay செய்து வைக்கக் கூறியுள்ள காரணமானது, மாண்புமிகு தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றத்தில் இந்த நீதிமன்றம் அசல் வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீட்டு வழக்கு எண்.23/2025 வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருக்கிறது என கூறியுள்ளார். ஆனால் மேற்படி மேற்முறையீட்டு வழக்கு எண்.23/2025 வழக்கில் மாண்புமிகு தென்காசி முதன்மை சார்பு நீதிமன்றம் கடந்த 02.12.2025 ம் தேதி இந்த நீதிமன்ற தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை உறுதி செய்து மேல்முறையீட்டை தள்ளுபடி செய்துள்ளது. அதனால் மனுதாரர்/தீர்ப்பு கடனாளி இந்த மனுவின் மூலம் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல Infructuous ஆகிவிட்டது. எனவே இந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,**

**இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 17 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.17 15:21:37 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர்,**
**செங்கோட்டை.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u> :–** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணம்</u>** **:–**இல்லை

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.12.17 15:21:42 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், செங்கோட்டை.**

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
செங்கோட்டை.

**இ.ஏ.எண். 5/2025**

IN

இ.பி.எண்.2/2025

IN

அ.வ.எண்.78/2015

நேரிய/வரைவு உத்தரவு

**நாள்:17.12.2025**